ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved)

Km/Km/Al-Mazhar Girls' High School - Nintavur

பாடசாலை மட்ட இரண்டாம் தவணைக்கணிப்பீடு - 2024

குடியியற்கல்வி

புள்ளிகள்

சுட்டெண்.................. **தரம் : 11** நேரம் : 3.00 மணித்தியாலம்

பகுதி 1

பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக

1) தேர்தல் ஒன்றின் போது மிக முக்கிய பங்கு வகிப்பவர்கள்
   1. வாக்காளர்கள் 2. அபேட்சகர்கள் 3. பிரஜாவுரிமை மறுக்கப்பட்டவர்கள் 4. சிறுவர்கள்

2) அரசியலின் பிரதான கூறுகள் எத்தனை?
   1. ஒன்பது 2. ஐந்து 3. மூன்று 4. நான்கு

3) ஜனநாயக சமூகம் ஒன்றில் காணப்படக்கூடியவற்றுள் ஒன்று
   1. போட்டி தன்மையான கட்சி காணப்படாது 2. சுதந்திர ஊடகம் இல்லை
   3. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறும் 4. சுதந்திரமான நீதி இல்லை

4) இலங்கை அரசியலமைப்பின் படி சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பணியினை மேற்கொள்ளும் துறை
   1. சட்டத்துறை 2. நிறைவேற்றுத் துறை 3. நீதித்துறை 4. அரசதுறை

5) ஜனநாயக நாட்டில் காணப்படும் சமூக நல நோம்பல் நடவடிக்கைகளில் ஒன்றாக கூற முடியாத நடவடிக்கை
   1. சுகாதாரம் 2. வறுமை ஒழிப்புத் திட்டம்
   3. முதியோர் பாதுகாப்பு 4. ஊழியர் சுரண்டப்படல்

6) சுவிட்ச்லாந்தில் பிராந்திய அலகு அழைக்கப்படுவது
   1. மாநிலம் 2. கன்ரன் 3. பிரதேசம் 4. மாவட்டம்

7) மாகாண சபை ஆளுநரை நியமிப்பவர்
   1. ஜனாதிபதி 2. பிரதமர் 3. முதலமைச்சர் 4. வாக்காளர்

8) அரசின் சட்டம் நீதி நிர்வாகம் எனும் முத்துறை அதிகாரங்களும் மத்திய அரசினால் செயல்படுத்தப்படுமாயின் அவ்வரசு
   1. ஒற்றை அரசு 2. சமஷ்டி ஆட்சி அரசு 3. கூட்டுக் கட்சி அரசு 4. மக்களாட்சி அரசு

9) வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு வழிவகுக்கும் ஆட்சி முறை சமஷ்டி அரசு என கூறியவர்
   1. KV.வியர் 2. AV.டைசி 3. CF.ஸ்ரோஸ் 4. J.பைனர்

10) இலங்கையின் பன்மை பண்பாட்டுச் சமூகம் உருவாக்குவதில் செல்வாக்கு செலுத்தும் குடிப்பெயர்வு தொடர்பான காரணிகளில் ஒன்று
   1. சேனன் குத்திகன் ஆக்கிரமிப்பு 2. கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு
   3. விஜயனும் தோழர்களும் வருகை தந்தமை 4. புவியியல் அமைவிடம்

11) வளங்கள் தேவையிலும் குறைவாக காணப்படும் தன்மை
   1. ஆசை 2. பற்றாக்குறை 3. வறுமை 4. அருமை

12) பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பாக மனித வலுவை அதிகம் பயன்படுத்தல்.
   1. முதலீட்டு நுட்பம் 2. சேவைகள் 3. உழைப்பு நுட்பம் 4. அருமை

13) பொருளாதாரம் அல்லாத பண்டங்களில் ஒன்று
   1. உடை 2. வளி 3. சீனி 4. மருந்துகள்

14) கணவன் மனைவி தாய் தந்தை பிள்ளைகளிடையே பல்வேறு காரணங்களால் ஏற்படும் மோதல் வகை?
   1. தனியாள் மோதல் 2. குடும்பத்தினுள் மோதல்
   3. குழுக்களிடையே மோதல் 4. நாட்டினுள் மோதல்

15) இணக்கப்பாடு செய்வதற்கு சட்டரீதியான நிறுவனமாக நிதியமைச்சினால் நிறுவப்பட்ட சபை
   1. சட்டசபை 2. இணக்க சபை 3. பிரதேச சபை 4. நகர சபை

16) அரசியல் யாப்பு ஒரு நாட்டின்
   1. ஒழுக்கமாகும் 2. அடிப்படை சட்டமாகும் 3. நிதி விடயமாகும் 4. அபிவிருத்தி ஆகும்

17) பன்மைப்பண்பாடு சமூகம் காணப்படாத நாடு
   1. இந்தியா 2. இலங்கை 3. சவூதி அரேபியா 4. ஐக்கிய அமெரிக்கா

18) ஒரு சமூகத்திற்கு ஓர் அரசு என்ற எண்ணக்கரு குறிப்பது
   1. சமஸ்டி அரசு 2. ஜனாதிபதி அரசு 3. ஒற்றையாட்சி அரசு 4. நவீன தேசிய அரசு

19) நான் விரும்பிய சட்டபூர்வமான தொழில் அல்லது வியாபாரம் முயற்சியை மேற்கொள்ளுதல் நல்லாட்சியின் எவ்வகையான பண்புகளுக்குள் அடங்கும்
   1. அரசியல் 2. சமூகம் 3. பொருளாதாரம் 4. பண்பாடு

20) இலங்கைக்கு வியாபார வர்த்தக நோக்கில் வருகை தராத தேசத்தவர்கள்
   1. சீனர் 2. இந்தியர் 3. அரேபியர் 4. ஆப்கானிஸ்தர்

21) கனிய எண்ணெய் உற்பத்தி எத்துறையினரால் உற்பத்தி செய்யப்படுகிறது
   1. தனியார் துறையினரால் 2. அரச தனியார் துறையினரால்
   3. அரசத்துறையினரால் 4. வெளிநாட்டவரினால்

22) சுகாதாரம், கல்வி தபால், போன்றன
   1. சேவை உற்பத்தி 2. பொருள் உற்பத்தி
   3. விவசாய உற்பத்தி 4. கைத்தொழில் உற்பத்தி

23) உலகமயமாதலில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள சாதகமான விளைவு
   1. சுற்றுச்சூழல் தாக்கம்
   2. தேசிய வளங்கள் சுரண்டப்படல்
   3. வெளிநாட்டு முதலீடு புதிய தொழில் நுட்பங்கள் உள் வருகை
   4. மூளை சாலிகள் வெளியேற்றம்

24) இலங்கையில் 1977 இன் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட பொருளாதாரக் கொள்கை
   1. முதலாளித்துவ பொருளாதாரம் 2. சமதர்ம பொருளாதாரம்
   3. திறந்த பொருளாதாரம் 4. நிலை மாறும் பொருளாதாரம்

25) கலப்பு பொருளாதார முறையை பின்பற்றும் நாடாக கருதப்படுவது
   1. பிரித்தானியா 2. ஐக்கிய அமெரிக்கா 3. ஜப்பான் 4. இலங்கை

26) மோதல் தொடர்பில் ஆய்வினை மேற்கொள்ள முதல் முக்கோணம் எனும் மாதிரியை அறிமுகப்படுத்தியவர் யார்?
   1. ஏ.வி.டைசி 2. ஜோஹான் கல்டுன் 3. கே. சி. வியர் 4. ஸ்ட்ராங்

27) மோதலுக்கு ஆரம்பமாக அமைவது
   1. கட்டுப்படுத்த முடியாத உணர்ச்சிகள் 2. பயம்
   3. பொறாமை 4. வெறுப்பு

28) முரண்பாடு தீர்த்தலின் போது நடுநிலையாளர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய குணவியல்பு
   1. கருணை 2. அன்பு 3. பொறுமை 4. செவிமடுத்தல்

29) குற்றவியல் சட்டத்திற்கு இணங்க தண்டனைக்குரிய குற்றங்களை மட்டும் கொண்டுள்ள விடை தொகுதி
   1. கொலை, கற்பழிப்பு, அரசுக்கு எதிரான செயல் 2. விவாகரத்து, கொலை, சிறுவர் துஷ்பிரயோகம்
   3. வணிகச் செயற்பாடு, பாலியல் குற்றம் 4. காணிப்பினக்கு, கற்பழிப்பு

30). பாலியல் குற்ற செயல்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமுடைய நீதிமன்றம்?
   1. நீதவான் நீதிமன்றம் 2. மேல் நீதிமன்றம்
   3. உயர் நீதிமன்றம் 4. மேல்முறையீட்டு நீதிமன்றம்

31) சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதானி
   1. சபாநாயகர் 2. சட்டமா அதிபர் 3. பிரதமர் 4. ஜனாதிபதி

32) மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு தண்டனையை நிறைவேற்றுமாறு தேவையான சிபாரிசுகளை ஜனாதிபதிக்கு வழங்குவது
   1. பிரதம நீதி அரசர் 2. சோலிசிடர்
   3. ஜெனரல் நீதி அமைச்சர் 4. சட்டமா அதிபர்

ஒரு நாடு சட்டத்தின் மேன்மைக்கு உட்படும் ஆட்சி
1. சட்டத்தின் ஆட்சி என்பர் 2. தன்னாட்சி
3. நீதித்துறை சுதந்திரம் 4. ஜனநாயகம்

ஒருவரின் மனித உரிமை மீறப்படும் போது அது தொடர்பில் முறைப்பாடு செய்வது.
1. நிதி ஆணைக்குழு 2. நீதி சேவை ஆணை குழு
3. மனித உரிமைகள் ஆணைக்குழு 4. தேசிய போலீஸ் ஆணைக்குழு

சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட யாப்பு சீர்திருத்தம்.
1. கோல்புருக் 2. மனிங் 3. டொனமூர் 4. 1972

இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தை பெற்றுக் கொடுத்த யாப்பு சீர்திருத்தம்
1. டொனமூர் 2. சோல்பரி 3. முதலாம் குடியரசு 4. இரண்டாம் குடியரசு

இலங்கை ஜனாதிபதியின் பதவிக்காலம்
1. ஆறு வருடங்கள் 2. மூன்று வருடங்கள் 3. ஐந்து வருடங்கள் 4. நான்கு வருடங்கள்

இலங்கையில் உள்ள தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை
1. 25 2. 24 3. 20 4. 22

இலங்கையில் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட அடிப்படையாக அமைந்த ஒப்பந்தம்
1. இலங்கை இந்தியா ஒப்பந்தம் 2. பண்டா செல்வா ஒப்பந்தம்
3. இலங்கை சீன ஒப்பந்தம் 4. ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம்

மாகாண சபையின் நிறைவேற்று துறையின் தலைவர்
1. ஜனாதிபதி 2. பிரதமர் நான் 3. ஆளுநர் 4. முதலமைச்சர்

(40×1=40 புள்ளிகள்)

பகுதி 2

- **முதலாம் வினா கட்டாயமானது**
- **முதலாம் வினாவும் ஏனைய 4 வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

1)

1) நேரடி ஜனநாயகம் நிலவிய கிரேக்க நகர அரசுகள் இரண்டு தருக.
2) அதிகாரம் செய்யப்படும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசுகளின் இரு வகைகளையும் தருக.
3) இலங்கையை பன்மை பண்பாட்டு சமூகம் கொண்ட நாடாக ஏற்றுக் கொள்வதற்கான இரு காரணிகளை தருக.
4) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளில் ஒன்றான "யாரால் உற்பத்தி செய்வது?" என்பது தொடர்பிலான இரு உப பிரச்சினைகளை தருக.
5) உலகமயமாக்கல் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள அனுகூலங்கள் 2 தருக.
6) தேர்தல் தொகுதிகளை பிரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் இரு விடயங்களும் எவை?
7) இலங்கையில் பொதுச்சட்டத்திற்கு மேலதிகமாக செயல்படும் விசேட சட்டங்கள் 2 தருக .
8) இலங்கை மத்திய அரசின் கட்டமைப்பில் காணப்படும் சட்டத்துறையின் பணிகள் இரண்டு தருக.
9) டொனமூர் அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்கள் இரண்டினை தருக.
10) மனித உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பாக முக்கியத்துவம் பெறும் வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

(10×2=20 புள்ளிகள்)

2)

1) ஜனநாயக ஆட்சி முறையின் இரு வகைகளும் எவை?
2) ஜனநாயக ஆட்சி முறையின் பண்புகள் மூன்று தருக
3) உலகில் செயற்படும் அரசியல் கட்சி முறைகள் மூன்றினை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(2+3+5=10 புள்ளிகள்)

03)

1) பண்பாடு தொடர்பாக வரைவிலக்கணம் கூறிய இரு அறிஞர்களை தருக.
2) இலங்கையில் பன்மை பண்பாட்டு சமூகம் உருவாவதில் செல்வாக்கு செலுத்திய குடிபெயர்வு தொடர்பான காரணிகள் மூன்று தருக.
3) பன்மை பண்பாட்டுச் சமூகம் ஒன்றின் சிறப்பான செயற்பாட்டிற்கு பிரசை ஒருவரினால் விருத்தி செய்ய வேண்டிய பண்புகள் மூன்றினை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக

(2+3+5=10)

04)

1) வளங்களின் அருமைத் தன்மை என்றால் என்ன?
2) பயன்படுத்தப்படும் விதத்தின் அடிப்படையில் உற்பத்தி பொருட்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
3) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக உலகில் நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார முறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை விளக்குக.

(2+3+5=10)

05)

1) சட்ட மூலாதாரங்கள் இரண்டு தருக.
2) இலங்கையில் நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாக்க 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் 3 தருக.
3) இலங்கையில் செயல்படும் நீதிமன்றங்கள் மூன்றினை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக

(2+3+5=10)

06)

1) ஒற்றையாட்சி முறை நிலவும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் இரண்டு தருக.
2) பிரஜைகள் தொடர்பில் அரசின் பொறுப்புகள் மூன்று தருக.
3) இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் மூன்று வகைகளையும் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(2+3+5=10)

07)

1) உரிமைகளுடன் தொடர்புடைய இருதரப்பினர்களையும் தருக.
2) ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தை தயாரிக்கும் போது கவனம் செலுத்திய மூன்று நியதிகளை தருக?
3) அ) இலங்கையில் தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட இரு சட்டங்களை தருக.

ஆ) பெண்கள் உரிமைகளை பாதுகாக்க இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் 3 தருக?

(2+3+5=10)

விடைகளும் புள்ளித் திட்டமும் தரம் - 11
குடியியற்கல்வி

பகுதி - II

01. i. ஏதென்ஸ், ஸ்பாட்டா
ii. ஒற்றையாட்சி அரசு, சமஷ்டியாட்சி அரசு.
iii. பல இனங்களைக் கொண்ட மக்கள் வாழ்தல் (தமிழர், சிங்களவர்)
பல சமயங்களைப் பின்பற்றுவோர் வாழ்தல்
பல மொழிகள் பேசப்படுதல்
பல கலாசாரங்கள் பின்பற்றப்படல்
iv. பயன்படுத்தப்படும் நுட்பங்கள் யாவை?
யாரால் (எத்துறையினரால்) உற்பத்தி செய்யப்படுகிறது?
v. வெளிநாட்டு முதலீடுகளின் வருகை.
பொருளாதாரம் பன்முகப்படுத்தப்படல்
புதிய தொழில் வாய்ப்புகள் உருவாதல்
புதிய தொழினுட்பங்களின் உள்வருகை.
உயர்தரமான உற்பத்திகள் தோற்றம் பெறல்
தரமற்ற உற்பத்திகள் சந்தையிலிருந்து நீக்கப்படல்
vi. சனத்தொகை, நிலப்பரப்பு
vii. முஸ்லிம் தனியார் சட்டம், தேசவழமைச் சட்டம், மலையகச் சட்டம்
viii. சட்டமியற்றல், நிறைவேற்றுத் துறைக்குத் தேவையான பலத்தை வழங்குதல், ஆளைத் தெரிவுத்தல், வரவு செலவுத் திட்ட நிர்வாகம்,
ix. நிர்வாகக் குழு முறை, சர்வசன வாக்குரிமை, அரசுக் கழகம், பிரதேச வாரி பிரதிநிதித்துவம்.
x. 1215 - மக்னகார்ட்டா உடன்படிக்கை, பிரித்தானிய மனித உரிமைகள் பிரகடனம், அமெரிக்க சுதந்திரப் பிரகடனம், பிரான்சியப் பிரகடனம், ரஷ்யப் புரட்சி.

(10x2 = 20 புள்ளிகள்)

02) 1. நேரடி ஜனநாயகம், மறைமுக (பிரதிநிதித்துவ) ஜனநாயகம் (02 புள்ளி 04) 1

2. * சர்வஜன வாக்குரிமைகள் மூலம் ஆசனங்களும் ஆட்சியாளர்களும் தெரிவுசெய்யப்படல்
* அரசியல் கட்சிமுறை
* நாடு தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருத்தல்
* உரிமைகள், சுதந்திரம், சமத்துவம் பேணப்படல் (03 புள்ளி 2.
* சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் இடம்பெறல்

3. 1. ஒருகட்சி முறை, இருகட்சி முறை, பலகட்சிமுறை (03 புள்ளி 3

எவையேனும் ஒன்றை வழங்கியிருப்பின் (02 புள்ளி

03) 1. T.B. ஜெயா, சார்ள்ஸ் A எல்ஷட், உ.கு. ஜீலர் (02 புள்ளி

2. விஜயனும் தோழர்களும் வருகை
மகிந்த தேரர் இலங்கை வருகை 5) 1
சங்கமித்தை பிக்குணி இலங்கை வருகை
பண்டுவாசுதேவன் இலங்கை வருகை
பத்தகச்சானா இலங்கை வருகை (03 புள்ளி 2

3. பிற கலாசாரங்களை மதித்தல்
ஒவ்வொருவரினதும் பண்பாடு, கலாசாரங்களை அறிந்துகொ
பிற சமயங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாதிருத்தல்
பிற மொழிகளைக் கற்றுக் கொள்ளல்
பிறரது கருத்துக்களை செவிமடுத்தலும் மதிப்பளித்தலும் 3.
முன்னிலைக் குறிப்பிடப்படின் (03 புள்ளிகள்)
எவையேனும் ஒன்றை வழங்கியிருப்பின் (02 புள்ளிக

4) 1. மனிதனின் தேவைகளையும் பார்க்க அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படல் வளங்களின் அருமைத்தன்மை எனப்படும்
(02 புள்ளிகள்)

2. நுகர்வுப் பொருள், இடைநிலைப் பொருள், மூலதனப் பொருள்
(03 புள்ளிகள்)

3. முதலாளித்துவப் பொருளாதார முறை
சமவுடமைப் பொருளாதார முறை (சோஷலிச)
கலப்புப் பொருளாதார முறை
(03 புள்ளிகள்
எவையேனும் ஒன்றை விளக்கியிருப்பின் (02 புள்ளிகள்)

5) 1. சமயம், அரசியல் யாப்பு, பழக்கவழக்கம், நீதிமன்றத் தீர்ப்புக்கள், சட்டவல்லுனர்களின் கருத்துக்கள் (02 புள்ளிகள்)

2. நீதிபதிகளை நியமனம் செய்தல், நீதிபதிகளை பதவி நீக்கம் செய்தல், நீதிபதிகளின் வேதனம், வேறு பதவிகள் ஏற்றல், தேவையற்ற தலையீடுகளைக் குறைத்தல், நீதிச்சேவை ஆணைக்குழுவை அமைத்தல்
எவையேனும் மூன்றினைக் குறிப்பிடுப்பின் - 03 புள்ளிகள்

3. உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், ~~மேல்~~ மாகாண மேல் நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம்
எவையேனும் மூன்றினைக் குறிப்பிடுப்பின் 03 புள்ளிகள்
ஒன்றினை விளக்கியிருப்பின் (02 புள்ளிகள்)

06) 1. ஐக்கிய இராச்சியம், ஜப்பான், பிரான்ஸ் -(02 புள்ளிகள்)

2. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
சட்டம் ஒழுங்கை நிலைநாட்டல்.
சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தல்
பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்
சமூக நல சேவைகளை திட்டமிட்டு செயற்படுத்தல்
மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
எவையேனும் மூன்றினைக் குறிப்பிடுமிடத்து (03 புள்ளி

3. பொது வீதிகள்
பொதுச் சுகாதாரம்
பொதுப் பயன்பாட்டு சேவைகள் - 03 புள்ளிகள்
ஒன்றினை விளக்குமிடத்து - 02 புள்ளிகள்

07) 1. உரிமைகளைக் கோருவோர்
உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க கடமைப்பட்டோர்
(02 புள்ளிகள்)

2. பாரபட்சமின்மை, பங்கேற்றல், சிறுவர்களின் உச்ச நலன், உயிர்வாழ்தலும் அபிவிருத்தியும்
மூன்றினைக் குறிப்பிடுமிடத்து (03 புள்ளிகள்)

3. அ. கடை காரியாலய சட்டம்,
தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம்
ஊழியர் சேமலாப நிதிச்சட்டம்
பெண்களுக்கான பிரசவகால ஓய்வு பற்றிய கட்டளைச்சட்டம்
சம்பளக் கட்டளைச் சட்டம் (02 புள்ளிகள்)

ஆ. - பெண்கள் பட்டயம் 1993 இல் வெளியிடப்பட்டமை.
- பெண்களுக்கான மகளிர் விவகார அமைச்சு ஏற்படுத்தியமை
- தேசிய மாதர் குழு அமைக்கப்பட்டமை.
- அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் சிறுவர், பெண்களுக்கெதிரான சிறுவர், பெண்கள் அலுவலகம் ஏற்படுத்தியமை
- பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைச் சட்டம் (03 புள்ளி